**மாகாண வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டம் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) - 2014**

மாகாண வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல் -பி 96 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

மாகாண வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும் தற்போதைய மாகாணசபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மாகாண வீதிகளை தரமுயர்த்தி புனரமைத்தல் மற்றும் வீதி முகவர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களின் நிறுவனரீதியான இயலளவை வலுப்படுத்தல் மூலம் கிராமப் பகுதிகளிலுள்ள மக்களிற்காக விசேடமாக வீதி வலையமைப்புக்களின் இணைப்பு மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல் மூலம் உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிராந்திய வேறுபாடுகளின் குறைப்பு என்பவற்றிற்கு பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஜப்பான் யென் 11,171 மில்லியனானதுடன் அதில் ஜப்பான் யென் 9,156 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 செப்தெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 சனவரி அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்ட காலப்பகுதி 2015 மார்ச் 25 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய, ,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 9,156.00 | 11,628.00 | 4,428.70 | 3,610.64 | 4,274.52 | 7,416.46 | 9,500.90 |
| இலங்கை அரசாங்கம் | 2,015.00 | 2,559.00 | 523.00 | 477.04 | 519.64 | 941.03 | 1,136.00 |
| மொத்தம் | 11,171.00 | 14,187.00 | 4,951.70 | 4,087.68 | 4,794.16 | 8,357.49 | 10,636.90 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள் 300.97 கிலோ மீற்றர் மாகாண வீதியின் புனரமைப்பு மற்றும் தரமுயர்த்தலிற்கு கட்டம் 02 இன் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்தங்கள் 39 பொதிகளின் கீழ் வழங்கப்பட்டிருந்ததுடன் 34 பொதிகளின் கீழான அத்தகைய வீதிகளின் 261.19 கிலோ மீற்றர் புனரமைப்பிற்கான ஒப்பந்தம் 2015 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.
பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மாகாணத்தில் 07 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 102 நாட்கள் தொடக்கம் 547 நாட்கள் வரையான வீச்சிலான தாமதங்களுடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரர்களிடமிருந்து அவற்றில் ரூபா 83.60 மில்லியன் கூட்டு மொத்தமான தாமதக்கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட கால இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டிருக்காதிருந்த 05 ஒப்பந்த பொதிகளின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தில் வீதிகளின் புனரமைப்பின் பௌதீக முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **வீதி** | **நீளம் கிமீ** | **எதிர்பர்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி** | **2015 யூன் 30 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம்** |
|---|---|---|---|
| | | | % |
| மஹோபிட்டிய பரம்பே தோட்ட வீதி | 8.20 | 2015 சனவரி 29 | 98 |
| அன்சசிஹல –போலகம பத்தம்பிட்டிய வீதி | 9.17 | 2014 நவம்பர் 28 | 89 |
| கோரமுல்ல- கரன்ஹொட- திமியாய வீதி | 7.00 | 2014 ஏப்ரல் 27 | 81 |
| அரனாயக்க- அம்பலகன்ட- கெல்லிய வீதி | 10.41 | 2014 யூன் 17 | 73 |
| மவெல- வெலன்கஹ- றுகட்டன வீதி | 5.00 | 2015 பெப்ரவரி 03 | 46 |

மேலும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சப்ரகமுவ மாகாணத்தில் மாவெல –வெலங்க –றுகட்டன வீதியின் புனரமைப்பு வேலைகள் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக 2015 யூன் 30 இல் உள்ளவாறு 46 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்தது. ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட ரூபா 16.21 மில்லியன் தொகையான மொத்த முற்பணத்தில் ரூபா 13.13 மில்லியன் தொகை மாத்திரம் ஒப்பந்த காலத்தின் இறுதியில் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேல், ஏனைய 04 வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பௌதீக முன்னேற்றம் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதியில் உள்ளவாறு 73 சதவீம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் மெதுவான முன்னேற்றத்தைக் காட்டப்பட்டிருந்தது. அத்தகைய வீதிகளின் மிகுதி புனரமைப்பு வேலைகள் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதிகளில் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டுமென இது சான்றுபடுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டமானது ரூபா 136.95 மில்லியன் கிரயத்தில் வீதிப் பராமரிப்பு உபகரணங்களை கொள்வனவு செய்திருந்ததுடன் அந்தந்த மாகாணத்தின் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளைத் தொடருவதற்கு சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி நிர்மாண இயந்திரவியல் அதிகாரசபை மற்றும் மத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிற்கு

கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் புனரமைக்கப்பட்ட வீதிப் பராமரிப்பு வேலைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மாகாண சபைகளால் வழங்கப்பட்ட நிதிகள் இன்மை காரணமாக வீதிப் பராமரிப்பு வேலைகள் வெற்றிகரமாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ள முடியாதிருந்தது என செயற்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார்.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

02 நடமாடும் அஸ்பற்றிடல் பொறிகள் சப்ரகமுவ மாகாணத்தில் 2014 மார்ச் 12 அளவில் வழங்கப்பட்டு பொருத்தப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட போதிலும் அத்தகைய பொறிகள் 2014 ஆகஸ்ட் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொருத்தமான இடம் இன்மை காரணமாக 2015 யூன் 30 வரையும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பண்டகசாலை கட்டணங்களிற்காக மற்றும் 2014 திசெம்பர் 26 வரை அவற்றில் ஏற்பட்ட வட்டியான ரூபா 10.38 மில்லியன் தொகையை மீளளிப்பதற்கு செயற்திட்டத்திடமிருந்து வேண்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், அத்தகைய இயந்திரங்கள் தாமத வழங்கல் காரணமாக செயற்திட்ட காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் மாதத்தில் மத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செயற்திட்டத்தால் ரூபா 29.82 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட அஸ்பற் பிறீமிக்ஸ் கலவை இயந்திரம் 2015 மே வரை 05 சந்தர்ப்பங்களில் மாத்திரமே வீதி வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சப்ரகமுவ மாகாணத்தில் 08 நிறைவேற்று பொறியியல் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 24.30 மில்லியன் பெறுமதியான 08 டிப்பர் வண்டிகள் மற்றும் ரூபா 9.95 மில்லியன் பெறுமதியான 08 இரட்டை டிறம் இரும்புச் சக்கர உருளைகள் என்பன வீதி பராமரிப்பு வேலைகளிற்காக நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 08 மாதங்களிற்கு மேலாக சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி நிர்மாண இயந்திரவியல் அதிகாரசபையின் வளவில் இருந்தது. மேலும், 2014 இல் ரூபா 2.94 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 15 தட்டு கொம்பாற்றர்கள் மற்றும் 15 புல் வெட்டும் இயந்திரங்கள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் சப்ரகமுவ மாகாணத்தின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலக வளவில் 2015 மே 31 வரையும் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

**3.5 முரணான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.4 ஆம் பிரிவுக்கு முரணாக செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் இரண்டு உத்தியோகத்தர்களிற்கு ரூபா 131,050 தொகையான விடுமுறைக்கான காசாக்கம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 08 மாதங்களிற்கு மேலாக பணிக்கொடை கொடுப்பனவிலுள்ள தாமதங்களில் ரூபா 134,794 தொகையான மிகையறவீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது.